*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2026** **26 ஜனவரி 2026**

**பத்திரிகை செய்தி**

குடியரசு தினம் 2026 தேநீர் விருந்து மக்கள் மாளிகையில் இன்று (26.01.2026) வழக்கமான உற்சாகத்தோடு கொண்டாடப்பட்டது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் அளித்த விருந்து நிகழ்ச்சியில் மாண்புமிகு முதலமைச்சர் திரு ந.ரங்கசாமி, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் , திரு R. செல்வம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு துறைகளை சார்ந்த முக்கிய பிரமுகர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில், பத்மஸ்ரீ விருது பெற்ற புதுச்சேரியை சேர்ந்த சிலம்பாட்ட கலைஞர் திரு பழனிவேல், தேசிய அளவில் கலை- கலாச்சார போட்டி மற்றும் கலா உத்சவ் போட்டிகளில் கலந்து கொண்டு விருதுகளை பெற்ற புதுச்சேரி பள்ளி மாணவர்களை துணைநிலை ஆளுநர் கௌரவித்தார்.